உணவு நெருக்கடியைத் தீர்க்க யோசனை செய்கிறார்களாம்!

எண்ணித் துணியாமல் இறக்குமதியைத் தவிர்த்து விட்டனர்

இன்றைய நிலை கண்டு ஏக்கமுறுகின்றனர்

ஆவன செய்வோம் என ஆறுதல் கூறுகிறார் உணவு மந்திரியார்

"1950ல் வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்வதாயின் 90 கோடி ரூபாய் செலவிட நேரிடும். எனவே 1950ல் உணவுப் பொருள் இறக்குமதி செய்வதில்லையென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது."

"சென்னை நிலைமை மோசமாக இருந்து அதன் காரணமாக இறக்குமதி திட்டத்தில் ஏதேனும் மாறுதல் காண வேண்டியிருந்தால், அதனை மத்திய சர்க்கார் கவனிக்கும்."

"அடுத்த சில வாரங்களில் பம்பாய் உணவு நிலைமை பற்றி ஆலோசிக்கப்படும். பம்பாய் 7·5 லட்சம் டன்கள் உணவுப் பொருள் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. ஆனால் பம்பாய்க்கென ஒதுக்கப் பட்டிருக்கும் அளவு 5 லட்சம் டன்களேயாகும். எஞ்சியுள்ள தேவையை உற்பத்தி மூலம் பம்பாய் ஈடுசெய்து கொள்ள வேண்டும்."

1950ல் மொத்தம் 104 லட்சம் டன்கள் தேவைப்படும் என பங்கீட்டுக்குழு அறிவித்திருக்கிறது. ஆனால் கையிருப்பு உட்பட இவ்வாண்டு கிடைக்கக் கூடிய அளவு 69 லட்சம் டன்களே. நிலைமை இப்படியிருந்த போதிலும், உற்பத்திப் பெருக்கத்தின் மூலமும், தேவையைக் குறைத்துக் கொள்வதன் மூலமும் ஒருவாறு குறைபாட்டைச் சமாளிக்கலாம் என்று மத்திய சர்க்கார் கருதிற்று."

இவை இந்தியப் பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது, உணவு மந்திரி தோழர் ஜெளலத்ராம் வெளியிட்ட கருத்துக்களாகும்.

இந்நாட்டை உணவுப் பஞ்சம பயமுறுத்திக் கொண்டிருக்கும் வேளையில்தான், இந்திய அரசியலாருக்கு சிக்கனத்தில் நாட்டம் செல்ல ஆரம்பித்தது.

ஒரு அரசாங்கம் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதென்றால், அதனை ஆர அமர யோசித்துச் செய்யவேண்டும். ஆடம்பர வகையில் எவ்வளவோ செலவழிக்கப்படுகின்றது. அவற்றை நிறுத்தி, மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படைத்தேவையான உணவுப் பொருளைத் தேடும் வகையில் பொருளைச் செலவிட வேண்டும். அதை விடுத்து, மக்களை வயிற்றில் அடித்துவிட்டு சிக்கனத்தைக் கைக்கொள்ள நினைப்பது அறிவுடைமையாகாது.

நமது இந்திய அரசியலார் அறிவுடைமை கலவாத் இத்தகைய அரும்பணியில் ஈடுபடுவதுதான் ஆட்சித்திறம் என்று நினைத்துக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் தருவிப்பதால் செலவு அதிகரிக்கிறது. எனவே, அதை நிறுத்தி விடவேண்டும் என்று முடிவுகட்டி விட்டனர். அந்த முடிவின் விளைவு எப்படி உள்ளது என்பதை, இப்பொழுதுதான் அனுபவத்தில் உணர ஆரம்பித்திருக்கின்றனர். அந்த உணர்வுதான் உணவு அமைச்சர் தோழர் ஜெளலத்ராமின் பேச்சு மூலம் வெளிப்பட்டிருக்கிறது.

எப்படியாவது நிலைமையை சமாளிக்க முடியும் என்று பார்த்தோம், முடியவில்லை; சென்னை தனக்குப் போதிய உணவில்லையென்று முறையிட ஆரம்பித்துவிட்டது.

பம்பாய் நிலைமையும் மோசமாய் இருக்கிறது. 5 லட்சம் டன்கள் போதாது, 7½ லட்சம் டன்கள் தேவை என்கின்றது.

என்று இரு மாகாண நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, "கவனிப்போம்," "ஆவன செய்வோம்" என்றெல்லாம் புன்னகவராளி பாடுகிறார் தோழர் ஜெளலத்ராம்!

தோழர் ஜெளலத்ராம் பேசிய வேளை கேள்வி கேட்கும் வேளையாக இருந்தபடியால், இதற்குமேல் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை போலும். இன்னும் சற்று விரிவாகப் பேச சந்தர்ப்பம் கிடைத்திருந்தால், மற்ற மாகாணங்களின் நிலை என்ன என்ற விபரமும் கிடைத்திருக்கும் என்றே நினைக்கிறோம்.

எனவே, தோழர் ஜெளலத்ராம் பேச்சைச் சற்று கூர்ந்து நோக்கினால், இந்திய சர்க்கார் உணவுப் பொருள் இறக்குமதி செய்வதில்லையென்று கொண்ட முடிவு எண்ணித் துணியாத முடிவு என்றே சொல்லவேண்டும். எண்ணித் துணிய வேண்டிய காரியத்தை துணிந்த பின் எண்ணிப் பார்க்கின்றனர். அப்படிப் பார்க்கின்றபோது பஞ்சம் அவர்களைப் பயமுறுத்துகிறது, மாகாணங்களின் முறையீடுகள் அவர்களை மருட்டுகின்றன. இந்நிலைக்குக் காரணமாயிருந்தது சென்னை எனலாம். சென்னையில் உணவு நிலை மோசமாக இருக்கின்ற காரணத்தால், சென்னை அதிகாரிகள் மத்திய சர்க்காரை நெருக்கியிருக்கிறார்கள் போலும். அதனாலேயே இப்பிரச்னை பற்றி பேசியிருக்க வேண்டும் உணவு அமைச்சர்.

சரி, போனது போக, இனியேனும் உணவுப் பிரச்னையில் அக்கறை காட்டி மாகாணங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய மத்திய சர்க்கார் முன் வருவார்களாக.

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (25-2-50) ✻ வெளியூர் (26-2-50) [இதழ் 178

நாமார்க்கும் அடிபணியோம்!

அணுகுண்டுக்கும் அஞ்சோம்!

—(0)—

முதலாளித்வத்தை முறியடிப்போம்

—(0)—

"பிராவ்தா" முழக்கம்

மாஸ்கோ, பிப். 23

அணுக்குண்டைக் காட்டியோ, புளிகளை உண்டு பண்ணியோ சோவியத் படைகளைப் பயமுறுத்த யாராலும் முடியாது. போருக்குப் பயந்தவர்கள் முதலாளி வர்க்கமே தவிர நாங்களல்ல, என்பது சரித்திரம் சாற்றும் உண்மை. முதலாளி வர்க்கம்தான் தனது அந்திய காலத்தை அணுகிக்கொண்டிருக்கிறது. அமைதியை நாடும் எங்களை முதலாளித்து நாடுகள் தாக்கினால், அமைதியை நாடும் மற்ற நாடுகளோடு சேர்ந்து கொண்டு, நாங்கள் முதலாளித்துவத்தை முறியடிப்போம்" என்று பிராவ்தா பத்திரிகை சோவியத் படையின் 32-வது பிறந்த தின விழாவையொட்டி எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

செய்ரோ, பிப் 23—

ஆப்கன் மன்னர் மார்ச் 3-ந் தேதி எகிப்துக்கு விஜயம் செய்கிறார். அவர் பாரூக் மன்னரின் விருந்தினராக தங்கியிருப்பார். —ரூனோப்

போலீஸ் தலைவர் குடும்பத்துடன் ஓட்டம்

விளட்னாச், பிப். 24—

ஹங்கேரியின் போலீஸ் தலைவரான பீட்டர்சேபனும், அவருடைய குடும்பத்தினரும் நாட்டை விட்டு ஓடிப்போய் அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள ஆஸ்திரிய பகுதிக்குப் போய்சேர்ந்து விட்டனர். இவர் தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் தஞ்சமளிக்கும்படி அமெரிக்க அதிகாரிகளைக் கேட்டிருக்கின்றனர்.

இந்தியா, பாக், இலங்கை காமன்வெல்த்தை விட்டு விலகுமாம்!

—(0)—

எகிப்து பத்திரிகையின் ஏமாளித்தனம்!

லண்டன், பிப். 24—

இந்தியா, பாகிஸ்தான் இலங்கை மூன்று நாடுகளும் காமன்வெல்த்தை விட்டு விலகும் என்று, பாக்தாதிலிருந்து செய்தி கிடைத்துள்ளதாக 'அல்மிஸாரி' என்ற எகிப்துப் பத்திரிகைப் பிரசுரித்திருக்கிறது. இச்செய்தியை வீண்புரளி என்றே லண்டன் வட்டாரங்கள் கருதுகின்றன. இச்செய்தியைக் கேட்டு லண்டனிலுள்ள இந்தியா, பாகிஸ்தான் இலங்கை ஹைகமிஷனர்களே ஆச்சரியமடைந்திருக்கின்றனர். இதைப் பற்றி எவ்விதத் தகவலுமே இல்லை என்று இந்தியா ஹவுஸ் அதிகாரி கூறினார்.

தொழிற் கட்சிக்கு பெருமித வெற்றி

சர்ச்சில் கோஷ்டி மண்ணைக் கவ்விற்று!

பிரிட்டிஷ் பொதுத்தேர்தல் முடிவுகள்

லண்டன் பிப். 24—

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலின் 266 தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் கிடைத்திருக்கின்றன

கிளமெண்ட் ஆட்லி (தொழிற் கட்சி) 12000 வோட்டுகள் அதிகமாகவும், ஸாஸ்டா போர்ட் கிரிபஸ் 16000 வோட்டுகள் அதிகமாகவும் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இதரதொழிற்கட்சி மெம்பர்களான பிலிப் நோவல்பேக்கர், ஹெபிர்ட் மில்ஸன், சுடர் எட் ஜார்ஜ் டாம்லின்ஸன், ஜோர்க் ஐஸக்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

கன்ஸர் வேடிவ் அபேட்சகர் ஆலிவர் ஸ்டான்லி 12000 வோட்டுகள் அதிகமாகப்பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

வின்ஸ்டன் சர்ச்சில் மகன் ரண்டோல்ப் சர்ச்சில் (கன்ஸர் வேடிவ்) பிளாட்மில்ஸ் தோல்வியடைந்திருக்கின்றனர்.

இதுவரை கம்யூனிஸ்டுகள் யாரும் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை.

தேர்தல் கண்ணோட்டம்

தொழிற்கட்சி	163	ஸ்தானங்கள்
கன்ஸர்வேடிவ்	102	,,
லிபரல்	1	,,

மொத்தம் 622 ஸ்தானங்களுக்கு 266 ஸ்தானங்களின் முடிவு தெரிந்துள்ளது. பழைய பார்லிமெண்டில் அங்கம் வகித்த கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்களில் 16 பேர்மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மந்திரிகளாயிருந்தவர்களில் இருவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இதுவரை 10 பெண்கள் வெற்றிபெற்றுள்ளனர். மொத்த வாக்காளர்களில் 84% வாக்களித்துள்ளனர். சென்ற தேர்தலில் 75% வாக்காளர்களே வாக்களித்தனர்.

லண்டனில் மைகேல் ஸ்காட் பாதிரியார்

லண்டன், பிப். 24—

தென்னாப்பிரிக்காவில் உள்ள நிறத்திமிர் கட்டுப்பாடுகளை சினிமாப்படமாகப் பிடித்து அதன்மூலம் பிரசாரம் செய்துவரும் மைகேல் ஸ்காட் பாதிரியார் திங்களன்று இந்தியா ஹவுஸுக்கு விஜயம் செய்து ஹை கமிஷனர் தோழர் கிருஷ்ண மேனனைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

மாலை மணி

சென்னை 25—2—50 சனிக்கிழமை

அடக்குமுறை :: அணைக்கிறது!

எண்ண உரிமை.

எழுத உரிமை.

எடுத்துக்கூற உரிமை.

நம்பிக்கை வைக்க உரிமை.

வழிபட உரிமை.

இத்தகைய உரிமைகளையெல்லாம் வழங்குவதே "எங்கள் குடியரசு" என்று எக்காளமிட்டு 'குடியரசு' ஆட்சிப் பீடம் ஏறினர் ஆளவந்தார்கள். இப்படிப்பட்ட உரிமைகளெல்லாம் 'குடியரசு' தோன்றிய பிறகு கிடைத்துவிடும் என்றுதான் மக்களும் நம்பி, 'குடியரசு' நாளை பல காலமாக எதிர்பார்த்து நின்றனர்.

* * *

அந்தக் 'குடியரசு' இப்பொழுது வந்து விட்டது.

'குடியரசின் பலன் கிட்டு'மென்று மக்கள் இருகையேந்தி நிற்கின்றனர்.

அவர் கைகளிலே குடியரசின் பலன்கள்' கொட்டப்படுகின்றன, ஆளவந்தார்களால்! அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாகக் கொட்டப்படுகின்றன!

பத்திரிகைப் பறிமுதல்—ஜாமின் கோரிக்கை—புத்தகத்திற்குத்தடை — நாடகங்களுக்குத் தடுப்பு—தொண்டர்கள் படையா, கூடாது—பொதுக் கூட்டங்களா, முடியாது—கூட்டமுயன்றால் 144 அமுல்—தடியடி—துப்பாக்கிப்பிரயோகம்—சிறைப்பிடித்தல்—காவலில் வைத்தல் இவைதாம் 'குடியரசு' கொடுத்துவரும் வற்றுப் பலன்கள்' 'குடியரசு' தான் தோன்றுவதற்கு முன்னும் இத்தகைய பலன்களைக் கொடுத்தும்—இப்பொழுது கொடுத்து வருகிறது.

இவற்றிலே சேலம் சிறைச் சம்பவம் முக்கியமான 'பலன்'!

இப்பொழுது, சென்னை ஆட்சியாளர், புதிய 'குடியரசு' அமைப்புக்கு அலங்காரமாக இருக்கட்டும் என்று கருதியும், 'குடியரசு' அமைப்பில் இல்லை என்று பிறர் குற்றங் கூறக் கூடாது என்று எண்ணியும், மற்றொரு 'பலனை' அரசியல் அமைப்பில் இணைத்துள்ளார்கள். அதுதான், பொது அமைதிப் பாதுகாப்புச் சட்டத்தை அரசியல் அமைப்புக்கு ஏற்றபடி திருத்தி, அதனோடு ஒப்புவைத்துக்கொள்வதாகும்.

1949-ம் ஆண்டு பொது அமைதிப் பாதுகாப்புச் சட்டம் தன் காரசாரத்தில் சிறிதும் குறைந்து போகாதவகையிலும், புதிய அரசியல் அமைப்பு ஏற்றுக்கொள்ளும் முறையிலும் அந்தச் சட்டத்திற்கு மிகத்திறம்பட திருத்தம் கொடுக்க, சென்னை அரசாங்கத்தார் மசோதா ஒன்று கொண்டு வந்துள்ளார்கள். மசோதா எப்படியும் நிறைவேறிவிடப்போகிறது என்பதுதான் உலகறிந்த உண்மையாயிற்றே!

அந்தப் பொது அமைதிப் பாதுகாப்புச் சட்டம் தரும் 'பலன்கள்':—

அரசாங்கம் தமக்கு வேண்டாதவர்கள் யாரையும் சந்தேகப்படலாம்,

சந்தேகப்பட்ட யாரையும் பொது அமைதிக்குப் பாதகம் தேடுவதாகக் குற்றஞ்சாட்டிப் பிடிக்கலாம்.

பிடித்து காவற்கைதிகளாக வைக்கலாம்.

எத்துணை காலத்துக்கு வேண்டுமானாலும் இஷ்டப்படி வைக்கலாம்,

எப்பொழுது விடலாம் என்று அரசாங்கம் விரும்புகிறதோ, அப்பொழுதுதான் விடப்படுவார்கள்.

விருப்பம் இல்லையாயின், சிறை வாழ்வுதான்.

இந்த நடவடிக்கைகள்பற்றித் தட்டிக்கேட்க நீதி மன்றத்துக்கு உரிமையில்லை,

ஆகிய இவைதாம். இவைகள் முக்கிய பலன்கள்! இவைகள் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சிறு சிறு பலன்கள்' எவ்வளவோ இருக்கின்றன.

ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் காங்கிரஸ் கட்சியினர், தமக்கு வேண்டாதவர்களை — தமது கொள்கைக்கு மாறுபட்டவர்களை-தம்மைவிட செல்வாக்கு பெற்றுவிடும் எதிர்க்கட்சியினரை-தமக்குள்ள அதிகாரம் பட்டம், பதவிகளைப் பறித்துக் கொள்ளும் அளவுக்குவளர்ந்துவிட்டவர்களை, சிறைக்காவலில் வைத்துவிட்டு, தாம்மட்டுமே நாட்டில் என்றென்றும் வாழ்வதற்கான வகை தேடிக்கொள்ளவே, இத்தகைய அடக்குமுறைச்சட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கின்றன. இத்துணை அடக்கு முறைவகைகளும் காந்தியார் போதித்த அகிம்சையின் பெயரைச் சொல்லித்தான் பிரயோகிக்கப்படுகின்றன!

இதுதான் காந்தீய முறை ஆட்சியின் - குடியரசாட்சியின் கோலமா என்று கோடிக்கணக்கான மக்கள் கேட்கின்றனர். தங்கள் கண்ணீரைக் காட்டி, கால்வயிறு கஞ்சிகூட நிரம்பாத வயிற்றைக் காட்டி, பசியைக் காட்டி, பட்டினிச் சாவைக் காட்டி, வறுமையைக் காட்டி, வசதியின்மையைக் காட்டி, எல்லாவற்றிற்கும் மேலாக உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிக்கப்படுவதைக் காட்டி! இவற்றிற்கு ஆளவந்தாரின் நீதியுள்ளமும், நேர்மைப் போக்கும் அல்லவா பதில் கூறவேண்டும். ஆனால், இன்றைய ஆளவந்தார்கள் துப்பாக்கியை விட்டுப் பதிலுரைக்கின்றனர்! 'சேலமே' சிறந்த எடுத்துக் காட்டு!

அரசியல் அமைப்பும், அடக்குமுறையும் ஒன்றை ஒன்று அணைத்துக்கொள்கின்றன! இன்னும் எத்துணை நாட்களுக்கு இந்த அணைப்பு நிலைக்கும்? உரிமை வேட்கை சக்தி ஒன்று திரண்டு உருவாகும் காலம் வரையிலும் தானே!

சென்னை மாவட்ட தி. மு. கிளைக் கழக செயலாளர்களுக்கு

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் அமைந்த பிறகு, சென்னையில் பல வட்டங்களில் கிளைக் கழகங்கள் நிறுவனம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் நிறுவனம் செய்யப்பட்ட செய்திகள், மாவட்டக் கழகச் செயலாளருக்குச் சரிவர அனுப்பிவைக்கப்படவில்லை.

அடுத்துவரும் செயற்குழுக் கூட்டத்தில், சென்னை மாவட்ட அமைப்புக்கேற்ப பெரு வட்டங்கள் பிரித்து, பெருவட்டச் செயலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருப்பதாலும், வட்டவாரியாக அங்கத்தினர் சேர்த்தல், பிரசாரக் கூட்டங்கள் நடத்துதல் ஆகிய காரியங்களைத் தீவிரமாகக் கவனிக்கவேண்டியிருத்தலாலும், மாவட்டக் கழகம் அமைந்த தேதியாகிய 4—12—50 க்குப் பிறகு கிளைக் கழகங்கள் அமைத்த தோழர்கள், தங்கள் கிளைக் கழக நிர்வாகிகளின் முகவரிகளையும் தங்கள் கழகத்தின் சார்பாக மாவட்டக் கழக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களின் முகவரிகளையும், "செயலாளர், மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 2/45 முத்துமாரிச் செட்டித் தெரு, மண்ணடி சென்னை-1" என்ற முகவரிக்குத் தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

கே. எம். கண்ணபிரான்
ஏ. கே. சாமி
துணைச் செயலாளர்கள்
செ. மா. தி. மு. க.

இந்தோனேஷியா கலகம் சமாளிக்கப்பட்டது

ஜாகர்தா, பிப். 24—

வெஸ்டர்லிங் ஏற்படுத்திய கலகநிலைமையை இந்தோனேஷியா சர்க்கார் சமாளித்துவிட்டது என்று தெரிகிறது. வெஸ்டர்லிங் முயற்சிகள் தோற்றதிலிருந்து இந்தோனேஷிய ராணுவம் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு விட்டது.

கலகம் விளைவித்தவர்களிடையே ஏற்பட்ட தகராறின் விளைவாகவே ஒரு பெரும் ஆபத்தை இந்தோனேஷியா தவிர்த்து விட்டது.

அறிவுக் கதிர்!

"மெய், வருந்திப் பாடுபடுவதே தொழிலாகக் கொண்டு வந்திருந்தவர்களெல்லாம் திராவிடர்களே என்று எளிதிற் கூறிவிடலாம். பெகு, பினாங்கு, சிங்கப்பூர் முதலிய கீழை நாடுகளில் காணப்படும் கலிங்கர்களிற் பெரும்பாலோர் திராவிடர்களே. மோரீசுக்கும் மேலை இந்தியக் குடியேற்ற நாடுகளுக்கும் சென்றுள்ள கூலி மக்களிற் பெரும்பாலோர் திராவிடர்களே."

—கிரியர்ஸன்

தி. மு. கழகக் கூட்டங்கள்

26 - 2 - 50

ஆம்பூர்:—	க. அன்பழகன், ப. இராமலிங்கம்.
கோலார் தங்கவயல்:—	என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்.
பொள்ளாச்சி:—	எஸ். ஆர். சுப்ரமணியம், அ. தமிழரசு, மா. தங்கவேலர்.

நகர டிராம்வே தொழிலாளர்களுக்கு கடுங்காவல் தண்டனை

ஒழுங்கீனமாய் நடந்துகொண்டதாக குற்றச்சாட்டு!

போனஸ்கோரி வேலை நிறுத்தம் செய்ததின் விளைவு!

சென்னை, பிப். 25—

போனஸ் கோரிஉள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சென்னை டிராம்வேத் தொழிலாளர் சங்கச் செயலாளரான தோழர் ரெங்கநாதன், டி சங்கத் துணைத் தலைவர் தோழர் ரஹீம் உட்பட 61 டிராம்வே தொழிலாளர் மேல் கீழ்படியாது நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, எழும்பூர் 5-வது மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நேற்று ஒரு மாத கடுங்காவல் தண்டனையளிக்கப்பட்டது.

சேலம் படுகொலைக்கு சென்னை ஓட்டல் தொழிலாளர் கண்டனம்

சென்னை, பிப். 23—

சென்னை ஓட்டல் தொழிலாளர் சங்கம் சைதாப்பேட்டை கிளையின் மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று 21-2-50 இரவு 9-30 மணிக்குத் தோழர் ஆர். என். சர்மா தலைமையில் நடைபெற்றது.

சேலம் சிறை நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டிப்பதுடன், அதற்கு காரணமாகவிருந்த சிறை அதிகாரிகளை விசாரணைக்குச் சிறையிலடைக்க வேண்டும் என்றும், தோழர் சக்கரைச்செட்டியாரை விசாரணைக் குழுவில் சேர்க்கவேண்டும் என்றும் தோழர் டி. ஜி. ராமசாமி ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசினார். தோழர் எஸ். மகாதேவன் அதை ஆதரித்துப் பேசினார். கூட்டம் தலைவர் முடிவுரையுடன் இனிது கலைக்கப்பட்டது.

அறிக்கை

சேலம் சிறையில், சிறைப் படுத்தப்பட்டிருந்த அரசியல் கைதிகளில், 22 பேர்கள் உயிரிழக்கவும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயமுறவும் ஆன கொடுமை நிகழும்படி, துப்பாக்கி திரைத்தனம நடத்திய செய்கை கண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அருவருக்கிறது—அநாகரிகமானதாக எண்ணுகிறது—அநீதியானது என்று கருதுகிறது—கண்டிக்க முனைகிறது என்பதை, அரசியலார்க்கு உணர்த்தி, அவ்வழியில் அவர்களுக்கு எச்சரிக்கையூட்ட வேண்டியது, கழகப் பொதுச் செயலாளரின் அறிக்கைப்படி அவசியமாதலால், ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்கள், தங்கள் தங்கள் செயற்குழுக் கூட்டங்களில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி, சென்னை ஆட்சி மன்றத்தினருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர்
பிரசாரக்குழு—தி. மு. க.

குடும்பம் ஒன்றுக்கு நான்கே குழந்தைகள்

சிங்கப்பூரில் புதிய குடும்ப அமைப்புத் திட்டம்

சிங்கப்பூர், பிப். 24—

நகர அமைப்புத் திட்டம் போல் குடும்ப அமைப்புத்திட்டம் ஒன்று அவசியம் என்பதை உணர்ந்து, இத்திட்டம் சிங்கப்பூரில் பரீக்ஷார்த்தமாக நடத்தப்பட்டதென்றும், இது மிகவும் வெற்றிகரமாக நடைபெறுகிறதென்றும், குடும்பங்களை எப்படி அமைப்பது என்பது குறித்தும், வியாதிகளைக் குணப்படுத்திக்கொள்ளவும் எல்லா வகுப்பு ஜாதிகளைச் சேர்ந்த சுமார் 150 ஸ்திரீகள் ஆலோசனை பெற்றிருக்கின்றனர் என்றும் அந்த சங்கத்தின் நிர்வாகக்கமிட்டி தலைவர் மிஸஸ் பார்னெல் கூறுகிறார். நான்கு குழந்தைகளுக்குமேல் ஒரு குடும்பத்தில் இல்லாமல் இருப்பதே நல்லது என்று இவர் கூறுகிறார்.

லண்டனில் இந்திய ஜவுளி கண்காட்சி

லண்டன், பிப். 24—

லண்டனில் மார்ச் மாதம் 9-ந் தேதி ஆரம்பமாகும் இந்திய ஜவுளிக் கண்காட்சியைப் புது சர்க்காரில் வர்த்தகபோர்டு பிரஸிடென்டாக யார் பதவிக்கு வருகிறாரோ அவர் திறந்துவைக்கிறார்.

விக்டோரியா ஆல்பர்ட் மியூஸியத்திலுள்ள இந்திய ஜவுளி டிஸைன்களும் இக் காட்சியில் இடம்பெறும். நவீன ஜவுளி டிஸைன்களும் இக் காட்சியில் பிரதர்சனம் அளிக்கப்படும். ஜவுளி தொழில் எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறதென்பதை வெளிப்படுத்துவதுடன் இந்திய ஜவுளிகள் விற்பனையையும் அதிகரிக்க இக் கண்காட்சி மிகவும் உபயோகமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

—(0)—

தூத்துக்குடி

தூத்துக்குடி, பிப். 22— 19—2—50 ஞாயிறு மாலை 7 மணிக்கு வடக்கூர் "போல்" மைதானத்தில், வடக்கூர் தி.மு. வாலிபர் கழகத்தின் சார்பாக, ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். ஒ. வெற்றிவேல் அவர்கள் தலைமை வகித்து சிறிது நேரம் பேசிய பின், தோழர் எம். என். சிவசாமி அவர்கள் பேசினார். அவர் தம் சொற்பொழிவில், காங்கிரஸ் சர்க்காரின் அடக்கு முறையைக் கண்டித்து "சேலம் படுகொலை"யைச் சுட்டிக்காட்டி, பட்டாளி மக்களின் உள்ளத்தைத் தொடும் அளவுக்கு உணர்ச்சி மிக்க பேசினார். அடுத்து அறிமுகப்பட்ட தோழர் என். எஸ். இளங்கோ, காங்கிரசின் பரம விரோதிகளாக இருந்த ஜாதி மதத்தின் தாசர்கள் இன்று மத்திய மாகாண சர்க்காரின் பதவி பீடத்தில் ஏறியிருக்கும் அக்கிரமத்தை எடுத்துக்காட்டி, காங்கிரசின் பாசிச போக்கு அழிந்தாலொழிய, நமக்கு நல்வாழ்வு கிடையாது என்று மிகவும் விளக்கமாகப் பேசினார். அவர் பேச ஆரம்பித்தவுடனேயே பெரும் மழை பெய்ய ஆரம்பித்தது. கூட்டம் முடியும் வரை மழையாகவே இருந்த போதிலும் கூடியிருந்த 5000க்கு மேற்பட்ட மக்களும் கொஞ்சமும் கலையாமல் கூட்டத்தில் இருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இராசமடம்

இராசமடம், பிப். 20— இவ்வூர் தி. மு. க. சார்பில் மன்னியம் டவுனத்தில் 16-2-50 வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அது சமயம் இராசமடம் தி. மு. க. செயலாளர் தோழர் ஆர். கே. கணேசன், புராண ஆபாசங்களையும் காங்கிரஸ் ஆட்சியின் வெறியர்களின் அட்டகாசப் போக்கையும், கருணை அற்றச் செயல்களையும் தெருவிளக்கமாக எடுத்துக் கூறினார்.

தோழியர் ஏ. சாவித்திரி அம்மையார் திராவிட முன்னேற்றக் கழகம் தலைக்கப்பட்ட காரணம், தி. மு. கழகத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமை ஆகியவற்றை மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்.

சென்னை "திராவிடன்" ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் தற்கால அரசியல் நிலையையும், அதில் நாம் அவதிப்படுவதையும் அவ்வூரில் ஆதித்திராவிடருக்கு முஸ்லீம்களுக்கும் ஏற்படும் சச்சரவு பற்றியும் காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சி. ஆதித்திராவிடர்கள் கட்டவேண்டாம் என்றும், காங்கிரஸ்காரர் ஒருபோதும் உதவி செய்யமாட்டார்கள் என்றும், நம்மிலும் ஏமாற்றம் அடைய வேண்டாம், கலைஞர்கள் தொண்டும் பொருள் செலவும் தான் நமக்கு ஏற்படும் ஆகையால் அவரிலே ஒற்றுமை மனப்பான்மையுடன் வாழவேண்டுமென்றும், போராட்டத்திற்கு எவ்விதத் தயக்கமும் இன்றி ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தயாராகவேண்டுமென்றும் கூறினார்.

கல்லிடைக்குறிச்சி

கல்லிடைக்குறிச்சி, பிப். 22— 20—2—50 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு இவ்வூர் "சுந்தர் விலாஸ்" சினிமாக் கொட்டகையில், தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. ச. தங்கப்பழம் தலைமை வகித்து, முகவுரையாக சிறிது பேசியபின், தோழர் எம். என். சிவசாமி அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தைக் குறித்து விளக்கமாகப் பேசினார். அடுத்து தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள், தமிழ் மன்னர்களின் ஆரியர்களை வீழ்த்திய வரலாறுகளைப் பல ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி, மீண்டும் நாம் வீர வாழ்வு வாழ தனியாட்சி தேவை என்று வீரமாகப் பேசி முடித்தார். தோழர் க. சுப்ரமணியம் நன்றி கூற, இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

மேலக்சற்கண்டார் கோட்டை

பொன்மலை, பிப். 20— 12-2-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு மேலசற்கண்டார் கோட்டை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா தோழர் என். காளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கத்தின் அவசியத்தைப் பற்றியும், கழக வளர்ச்சியைப் பற்றியும் எடுத்துரைத்தார். அடுத்து பேசிய தோழர் ஜி. வரதராசன் தொழிலாளர் நிலைமை பற்றியும் தொழிலாளர்கள் மீது சர்க்கார் தொடுக்கும் அடக்கு முறையைப் பற்றியும் விரிவுரையாற்றினார். அடுத்து தோழர் ஏ. ராஜு அவர்கள் நாடு பிரிவினையின் அவசியத்தைப்பற்றி எடுத்துரைத்தார். கடைசியாக தோழர் சி. பி. சிற்றரசு தற்கால அரசியல் நிலைமை பற்றியும் மேடையின் கோலாகலத்தைப் பற்றியும் சுமார் ஒரு மணி நேரம் விரிவாகப் பேசினார்.

இனி நடப்பவை

சென்னை—சைதாப்பேட்டை மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம், 26 2 50 ஞாயிறு மாலை 6 மணிக்கு சடையப்ப முதலித்தெரு வள்ளுவர் மன்றத்தில் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை:— சைதாப்பேட்டை தி. மு. கழகத்தின் உறுப்பினர் கூட்டம், 26—2—50 ஞாயிறு காலை 9 மணிக்குக் கழகக் கட்டடத்தில் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

மாயவரம்:— 26 2-50 ஞாயிறு மாலை 5-மணிக்கு, இவ்வூருக்கு வருகை தரும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு, கடைவீதி பொன்னுசாமி நாடார் பூங்காவில், தி. மு. கழகச் சார்பில் ஓர் வரவேற்பு அளிக்கப்படும்.

* * *

சென்னை ஓட்டல் தொழிலாளர் சங்கத்தின் மாபெரும் பொதுக் கூட்டமொன்று, 25-2-50 சனி இரவு 9-30 மணிக்கு நர்ஸ் குவாட்டர்ஸ் மைதானத்தில் (சென்ட்ரல் மெமோரியல் ஹால் எதிரில்) தோழர் சே. என். செட்டி தலைமையில் நடைபெறும்.

* * *

சென்னை:—வெஸ்லி உயர்நிலைப் பள்ளி ஆறும் படிவ மாணவர்களின் தமிழ் மன்றத்தின் ஆதரவில் 27 2-50 மாலை 4-30 மணிக்கு 'ஆண்டு விழா' நடைபெறும். தோழர்கள் ஏ. எம். சத்யா எம். ஏ. எல். டி. தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., கே. ஏ. மதியழகன் பி. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

வாலாஜாபாத்—இந்துமத பாடசாலைக்கு, 26—2—50 ஞாயிறு மாலை சென்னை உணவு மந்திரி கனம். போர்விக்டோரியா வருகை தந்து பள்ளியின் பல பகுதிகளையும், மாணவர் இல்லத்தையும், தொழிற்சாலையையும் பார்வையிடுவார்.

* * *

சென்னை—சென்னை முடி திருத்தும் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் 28-2-50 செவ்வாய் காலை 8—30 மணிக்கு சிதம்பரம்நகர் நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு 27-எண்ணுள்ள திருமணச் சத்திரத்தில் மதுரை முடிதிருத்தும் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்து ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். என். வி. நடராசன் தலைமை வகிப்பார். தோழர்கள் கே. ஏ. மதியழகன் பி. ஏ., காஞ்சி மணிமொழியார், மதுரை நிராசொரூபன் ஆகியோர் பேசுவார்.

ஆடுக மயிலே!

[புதுவைச்சிவம்]

மக்கள் உளத்தே மகிழ்ச்சி விளைக்கும்
மிக்கெழிற் றோகை விரித்து நடித்துத்
தூய எண்ணம் தோன்றிடச் செய்யும்
சாயல் மயிலே, சாயல் மயிலே,
உன்றன் தோகையில்—ஒளிரும் கண்களில்,
பன்னிறம் மிகவாய்ப் பயிலும் அவற்றில்,
உயர்வெது? தாழ்வெதென் றுரைத்திடுவாயோ?
மயல் இவன் யாரெனப் பார்த்திட லாகாதே!
என்னரு நாட்டார் இனியர்; ஆயினும்,
வன்புரை ஏற்று மாந்தர் பிறவியில்
உயர்வும் தாழ்வும் உண்டென் கின்றார்.
மயங்கிய அன்னவர் மதியைத் தெருட்டிட,
ஆடுக தோகை விரித்தே!
ஆடுக உன்பால் அறிவுபெற் றுளரவே!

கழக நடவடிக்கைகள்

பொன்மலை, மேலசற்கண்டார் கோட்டை:- இவ்வூர் தி. மு. க. சார்பில் 12 2-50ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. பெரியார் தலைமையாளரும், தோழர் சம்பத்தின் தந்தையுமாகிய வைத்திய வள்ளல் பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களது மறைவிற்காக இக்கூட்டம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றது. அவர் களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது."

2. "நமது கிராமத்தில் உள்ள போர்டு ஆரம்ப பாடசாலை சுகாதார வசதிகள் இல்லாத இடத்திலும், பள்ளி மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதியில்லா இடத்திலும் அமைந்திருப்பதால் வேறு நல்ல வசதிகள் இல்லாத இடத்தில் கட்டடம் கட்டித் தர திருச்சி ஜில்லா அதிகாரிகளையும் பஞ்சாயத்துப் போர்டாரையும் அரசாங்கத்தாரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது."

3. "சர்வே நெ. 236 2 நத்தம் புறம்போக்கு காலி இடத்தை ஒரு சில சுயநலமிகளுக்கு வீடு கட்டிக் கொள்ள சர்க்காரால் கொடுக்கப்படுகிறதாகத் தெரிகிறது. அவ்விடம் கிராமப் பொது மக்களுக்கு வசதிக்காக இருக்க வேண்டிய முக்கியமான இடமாகும். பள்ளிக்கூடம் வசதியான இடத்தில் கட்டித் தருவதற்கு இடமில்லாமல் இருக்கும் பொழுது அவ்விடத்தைத் தனிப்பட்டவர்களுக்கு அனுபவிக்கத் தருவது சரியல்லவென்றும் அவ்விடத்தைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்குத் தர வேண்டியது அவசியம் என்று அரசாங்கத்தாரையும், திருச்சி ஜில்லா அதிகாரிகளையும், பஞ்சாயத்து போர்டாரையும் இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது."

* * *

கோவில்பட்டி:—இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 16-2 50 மாலை 7-30 மணிக்கு ச. மணி அவர்கள் தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

இக்கிளைக் கழகத்திலிருந்து மாவட்டக் கழகத்திற்கு ஈ. வே. அ. வள்ளிமுத்து, செ. பொ. துரைசாமி ஆகிய இருவரையும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தற்போது மாவட்டக் கழக அமைப்பினர் சரியான முறையில் வேலை செய்யாமலும் கடிதங்களுக்கு பதில் எழுதாமலும், அங்கத்தினர் புத்தகங்களை அனுப்பாமலும் அத்துக்குடியில் இருக்கும் கட்சியின் பிளவின் காரணமாக மாவட்டக் கிளைக் கழகங்கள் அனைத்தும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் மாவட்டக் கழகத்திற்குச் சரியான அமைப்பாளர் ஏற்படுத்தவேண்டுமென்று மத்திய கழகச் செயலாளரைக் கேட்டுக்கொள்வதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

பொதுச்செயலாளர் நம்ம வட்ட சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாவட்ட மாநாட்டைக் கோவில்பட்டியிலேயே விரைவில் நடத்த வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறது. மற்றும் பேச்சாளர்களைக் கொண்டு நம் நகரில் பல பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று செயலாளரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

நம் கழகத்திற்கு எஸ். பால்ராசு அவர்களை மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் ஆட் பணியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

மேலே கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

பீளமேடு:—அண்ணன் உணவு விடுதியில் 13—2—50 மாலை 5-30 மணி அளவில் தி. மா. மு. க. செயற்குழு, செயலாளர் அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது வரவு செலவுக் கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. சந்தா கன்கொடை ரூ 32 6 6, செலவு ரூ. 8—8—0, மீதி ரூபாய் 27—21—2. இத் தொகையைக் கழகச் செயலாளர் அப்பாதுரையிடம் ஒப்புவிக்கப்பட்டது. கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேறின. பொருளாளராயிருந்த தோழர் செ. வெற்றிவேலின் ராஜினாமா அங்கீகரிக்கப்பட்டு, அவருக்கு கூட்டத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர். பொருளாளர் தம் பள்ளிவேலையின் இருதிக்கட்டத்தை எய்திவிட்டதால் ராஜினாமா செய்வதாகக் குறிப்பிட்டிருந்தார். பிறகு செயலாளர் நன்றிகூறசெயற்குழுக் கூட்டம் 7-15 மணி அளவில் இனிது முடிவு எய்திது.

* * *

சேலம் பொன்னம்மாப்பேட்டை 12 2-50 தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30 மணிக்கு இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகச்செயற்குழுக் கூட்டம் வீ. டி. பெருமாள் தலைமையில் கூடியது. அதுபோது கூட்டத்தின் அவசியத்தைப்பற்றி பி. சே. மண்ணூர், கே. சி. அர்த்தநாரி வீ. என் ராசு, எ. என். சாமு, பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

வைத்தியவள்ளல் ஈ.வே.கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இம்மாத கடைசி வாரத்தில் கழகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்டிடத்தைத் திறப்பு விழா செய்வதற்குத் தோழர் அண்ணாதுரை அவர்களைக் கொண்டும் என். வி. நடராசனையும் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களையும் அழைத்துத்திறப்புவிழா செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

சேலம் மாவட்ட தி.மு.க. அமைப்புக் கூட்டம்

அன்புடையீர்,

வரும் 5—3—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு, செவ்வாய் பேட்டைக் கிளை திராவிட முன்னேற்றக்கழகக்கட்டிடத்தில், சேலம் மாவட்ட அமைப்புக் கூட்டம் நடைபெறும். ஆகவே சேலம் மாவட்டத்திலுள்ள எல்லாக் கிளைக் கழகங்களும் கழகத்திற்கு இருவர் வீதம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை அக் கூட்டத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். ஏற்கனவே பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்பாத கிளைக் கழகங்கள் உடனடியாகத் தேர்ந்தெடுத்து அந்த விபரத்தை அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

பிரதிநிதிகள் அந்தந்த கழகத்தின் செயலாளரிடமிருந்து அதிகாரப் பத்திரம் பெற்று வர வேண்டுகிறேன். அத்துடன் அந்தந்த கழகத்தில் சேர்ந்த அங்கத்தினர்களின் அடிக்கட்டையையும் கட்டணத்தொகையையும் பெற்று வர வேண்டும். பிரதிநிதிகள் இதையே அழைப்பாகக் கொண்டு தவறாமல் வந்து சேர வேண்டுகிறேன்.

அ. சித்தையன்
அமைப்புக்குழு உறுப்பினர்
சேலம்

'சேலம் செய்கை'க்குக் கண்டனம்
சென்னையில் மாபெரும்
பொதுக்கூட்டம்

சேலம் சிறையில் துப்பாக்கி துரைத்தனம் நடத்தியது குறித்துக் கண்டனந் தெரிவிக்க,
சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் எதிரிலுள்ள மைதானத்தில்
(நேப்பியர் பார்க் அருகில்)
26—2—50 ஞாயிறன்று மாலை 5-30 மணிக்கு
பல கட்சிகளின் சார்பாக
மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது
தோழர் எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை (H.M.S.)
தலைமைவகிப்பார்.

தோழர்கள்:-எஸ். கிருஷ்ணமூர்த்தி பி.ஏ.,பி.எல். (M.P.T.U.C.)
கே எஸ். ஷெட்டி பி.ஏ.,பி.எல். (ராடிகல் டெமாக்ரடிக் பார்டி)
கே. ஜி. சிவசாமி (பிரஜா உரிமை சங்கம்)
டாக்டர் கே. வி. மேனன் (சோஷலிஸ்டு கட்சி)
இரா, நெடுஞ்செழியன் எம். ஏ., (தி மு. கழகம்)
சொற்பொழிவாற்றுவார்கள்
அனைவரும் வருக!

★ நாட்டு நடப்பு ★

தெ. ஆ. மாவட்ட ஆரம்ப ஆசிரியர் மாநாடு

பண்ணுருட்டி, பிப். 21—

19-2-50 அன்று இவ்வூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியில் மதுரை அமெரிக்கன் கல்லூரி பேராசிரியர் பண்டித ராம. மீனாட்சிசுந்தரம் எம். ஏ. அவர்கள் தலைமையில் தென்னார்க்காடு மாவட்ட 2-வது ஆரம்ப ஆசிரியர் மாநாடு மழையின் காரணமாய் 11-மணிக்குத் துவக்கப்பட்டது. தலைவரவர்கள் தமது சொற்பொழிவில் "பள்ளிகளின் ஆசிரியர்கள் கூலிக்காரர்களாகப் பாவிக்கப்படுகிறார்களென்றும், அதை நிவர்த்திக்க ஆசிரியர்கள் கூட்டு முறையில் ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்பட வேண்டுமென்றும், அப்படி நடத்த முன்வராத பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் பொதுப் பொருளிலிருந்து உதவியளிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார் மற்றும் தற்போதைய ஆட்சியில், ஆசிரியர் வேலாயுதம் நடத்தப்பட்ட கொடுமையைக் கண்டு நாமும் அஞ்சவேண்டிய நிலைமையிலிருப்பதாகவும் தெரிவித்து சுமார் 3-மணி நேரம் வரை சொற்பொழிவாற்றினார்.

பெண்ணாகடம் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ப. கோவிந்தசாமி அவர்கள் தமது சொற்பொழிவில் "இனி இம்மாதிரி ஆரம்ப ஆசிரியர்கள் மாநாடு கூட்டித் தமது குறைகளைத் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லாமல் சர்க்கார் நடந்து கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார். மாநாட்டைக் கடலூர் சார்பிற்பள்ளி ஆசிரியர் வி. எஸ். லட்சுமணசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

இடைவேளைக்குப் பிறகு, வ. உ. சி. படத்தை இவ்வூர் ஆவணப் பதிப்பாளர் வைத்தியலிங்கனார் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் படத்தைத் திறந்து வைக்க வேண்டுமானின் அவசியத்தைப் பற்றித் தலைவரவர்கள் ஷேக்ஸ்பியர் ஓர் ஆசிரியர் பல நூல்களை எழுதினதால் என்பதனால் என்று குறிப்பிட்டார். பிறகு "சிவாஜி" ஆசிரியர் திருச்சி திரிலோக சீதாராம் சொற்பொழிவாற்றினார்கள். அடுத்தபடியாக ஆசிரியர் வேலாயுதம் வழக்கை மீண்டும் அரசினர் கவனிக்க வேண்டுமென்ற தீர்மானம் உள்பட பல தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

கடைசியாக தோழர் திருக்குறள் முனுசாமி அவர்கள் நீண்ட கைத்தட்டலுக்கிடையே சுமார் 30 நிமிட நேரத்தில் நகைச்சுவை ததும்ப ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமுள்ள தொடர்பைப் பற்றிப்பேசி முடித்தபின், வரவேற்பாளர் சார்பில் நன்றி கூற மாநாடு மாலை 5 மணிக்கு இனிது முடிந்தது.

வள்ளுவர் வாலிபர் கழகம்

பெங்களூர், பிப். 20—

பெங்களூர்-ஸ்ரீராமபுரம் வள்ளுவர் வாலிபர் கழகத்தின் உறுப்பினர் கூட்டம் ஒன்று 14-2-50 அன்று மாலை 6 மணிக்கு கூடியது. அது சமயம் கழகச் செயலாளர் தோழர் செ. முனிரத்தினம் அவர்கள் மறைந்த வைத்திய கல்லல் ஈ. வே. கி. அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார். உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அன்னாருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர்.

19-2-50 அன்று காலை 10 மணிக்கு "காலமும் கருத்தும்" என்ற தலைப்பில் செ. முனிரத்தினம் அவர்கள் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் பல அன்பர்கள் கலந்து கொண்டு, காலத்திற்கு ஏற்ற முறையிலே கருத்தை அமைத்துச் சொல்ல வேண்டும் எனப்பேசினர். துணைச் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

மருத்துவ சங்கம்

தாராபுரம், பிப். 21—

18-2-50ல் தாராபுரம், மருத்துவ சங்கக் கூட்டம் முனிசிபல் முசாபரி பங்களாவில், தோழர் சங்கரன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் மதுரையில் நடைபெறும் சுகாதாரத்தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி தோழர்கள் ஆர். மருதாசலம் அவர்கள் (நகர காங்கிரஸ் கமிட்டி) ஆர். சின்னராஜு, எ. கோபாலன், மாரியப்பன் எம். எஸ். வேலாயுதம் முதலியோர் பேசினர். பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுரையில் நடைபெறும் சுகாதாரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை இக்கூட்டம் மனப்பூர்வமாய் ஆதரிப்பதுடன் மதுரை முனிசிபல் கவுன்சிலால் அத் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் கொடுமுறையை ரத்து செய்யும்படியும் கேட்டுக்கொள்ளுகிறது. பிறகு தோழர் காசப்பன் அவர்கள் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

ஜுபிடர்
மகிழ்ச்சியுடன் அறிவிக்கும் மற்றொரு வெளியீடு
விஜய குமாரி
நவரசங்களும் நிறைந்த
அருமையான சித்திரம்......
டைரக்ஷன்
ஏ.எஸ்.ஏ.சாமி

உங்கள் அபிமான நக்ஷத்திரங்கள்
எல்லோரும் நடித்திருக்கிறார்கள்......

கே.ஆர்.ராமஸ்வாமி — டி.ஆர்.ராஜகுமாரி
டி.எஸ்.பாலையா — குமாரி கமலா...
செருகளத்தூர் சாமா — பி.கே.சரஸ்வதி...
ஆர்.பாலசுப்ரமணியம் — கே.எஸ்.அங்கமுத்து...
கே.ஆர்.ராம்சிங் — எம்.எஸ்.சிவபாக்கியம்
எம்.என்.நம்பியார் — ஆர்.மாலதி.....

நடனங்கள்-லலிதா பத்மினி வைஜயந்திமாலா · தயாரிப்பு-எம்.சோமசுந்தரம் · ஸ்டுடியோ-சென்ட்ரல்
JUPITER PICTURES CIRCUIT

தென் ஆற்காடு மாவட்ட
தி. மு. கழக முதல் மாநாடு
12—3—50 ஞாயிறன்று குறிஞ்சிப்பாடியில்
"திருவள்ளுவர் பந்தலில்" நடைபெறும்

தலைவர் :— இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
துவக்குபவர் :—பூ. கணேசன் எம். ஏ.

சொற்பொழிவாளர்கள் :—
சி என். அண்ணாத்துரை எம் ஏ., க. அன்பழகன் எம்.ஏ., சேலம். ஏ. சித்தையன், ஈ. வெ. கி. சம்பத், என்.வி. நடராசன், டி. கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல் மற்றும் பல இயக்கச் சொற்பொழிவாளரும் கலந்துகொள்வர்.

இரவு சி. என். ஏ. குழுவினரால் நடத்தப்படும்
"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்

கட்டணம் :—

நன்கொடையாளர் ...	ரூ	5—0—0	(உணவுடன்)
வரவேற்பாளர் ...		"	(உணவுடன்)
சார்பாளர் ...	ரூ	2—0—0	(உணவுடன்)
பெண் சார்பாளர் ...	ரூ.	1—4—0	(உணவுடன்)
சார்பாளர் ...	ரூ.	1—0—0	(உணவின்றி)
பார்வையாளர் ...	ரூ	0—8—0	(உணவின்றி)
பெண் பார்வையாளர் ...	ரூ.	0—4—0	(உணவின்றி)

குறிப்பு :—குறிஞ்சிப்பாடி, கடலூர்—விருத்தாசலம் இரயில் மார்க்கத்தில் உள்ளது,

வரவேற்புக் குழுவினர். குறிஞ்சிப்பாடி.

பொழுதுபோக்கு
தமிழ் - நாடகம்
ஒற்றைவாடை — முதல் முழக்கம்

தமிழ்

பிரபாத்	— ரத்னகுமார்
சித்ரா	— ,,
[illegible]	— ஆரியமாலா
திருமகள் (சைதை)	வாழ்க்கை
மகாராணி	— ,,
லட்சுமி	— ,,
பாரகன்	— ,,
சரஸ்வதி	— ,,
சயானி	— [illegible]

தெலுங்கு

பிராட்வே	— குணசுந்தரி
வெலிங்டன்	— ,,
கெயிட்டி	— மனதேசம்
சன்	— ,,
கிரௌன்	— ,,

ஆங்கிலம்

Midland	— Oliver Twist
Casino	— Forbidden Street
Minerva	— The Lady Gambles
New Globe	— The Doolins Of Oklahoma
New Elphinstone	— King Of TheJungle
Roxy	— Tne Pirat Treasure

ஹிந்தி

[illegible]	
ஸெலக்ட்	— சிப்பாய்
அசோக்	— லட்சம்
ஸ்டார்	— சஜன்
நூர்	— ஆஜ் கி ராத்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St., Mannady, Madras 1.